**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 06.07.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 04.07.2018 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களது ஜுன் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/3230/16)

**தீர்மானம் எண். 343**

அனுமதிக்கப்பட்டது

(2) இராசிபுரம் நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு சு. தியாகராஜன் மற்றும் இந்நகராட்சியில் பணிபுரியும் மகப்பேறு ஆயா திருமதி கு. தனம் ஆகிய இருவருக்கும் 30.6.2018–இல் ஓய்வுபெற உள்ளதால் சிறப்பு சேமநலநிதி நிர்வாகப் பங்குத் தொகை தலா `. 10000/– வீதம் இருவருக்கும் `. 20000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1218/16)

**தீர்மானம் எண். 344**

அனுமதிக்கப்பட்டது

(3) இராசிபுரம் நகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க`.42.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு இரண்டாம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர் வைப்புத் தொகை செலுத்தாமலும், திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 4.64% கூடுதலான விலை விகிதம் வழங்கியுள்ளார். வைப்புத் தொகை செலுத்தப்படாத திரு ஜே. ரவிச்சந்திரன் ஒப்பந்தப்புள்ளியினை தள்ளுபடி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மதிப்பீட்டைவிட 4.64% கூடுதல் விலை விகிதம் வழங்கிய திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து வழங்கக் கோரியதில், தனது முந்தைய மதிப்பீட்டைவிட 4.64% அதிகமாக கொடுத்ததில் இருந்து 0.64% குறைத்து பணியினை செய்து தருவதாக கோரியுள்ளார். இப்பணியினை உடன் முடித்து அரசுக்கு பணி முடிவறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால் பணியின் அவசரம் கருதி திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மதிப்பீட்டைவிட கூடுதலான

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) வைப்புத் தொகை செலுத்தாத திரு ஜே. ரவிச்சந்திரன் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கலாம்.

ஆ) மதிப்பீட்டைவிட 4.64% கூடுதலான விலை விகிதம் வழங்கிய திரு ஆர். மாணிக்கம் 0.64% குறைத்து பணியினை மேற்க்கொள்ள இசைவு தெரிவித்துள்ளதாலும், பணியின் அவசியம் கருதியும் திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மதிப்பீட்டினைவிட கூடுதலான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/197/18)

**தீர்மானம் எண். 345**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2018–19–இன்கீழ் சாலைப் பணிகளை மேற்க்கொள்ள கீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்ட மான்ய நிதி | – | 1.38 கோடி |
| மாநில / மத்திய நிதிக்குழு மான்ய நிதி | – | 0.90 கோடி |
| மாநில நிதிக்குழு மான்ய ஊக்க நிதி | – | 0.42 கோடி |
| நகராட்சி பங்களிப்பு | – | 0.30 கோடி |
| | மதிப்பீட்டுத் தொகை `. | 3.00 கோடி |

மேற்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீட்டின்படி `. 3.00 கோடி மதிப்பீட்டு சாலைப் பணிகளை மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது நிர்வாக அனுமதி பெற முன்மொழிவுகள் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/987/18)

**தீர்மானம் எண். 346**

அனுமதிக்கப்பட்டது

(5) சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2017–18–இல் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6–இல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி `. 5.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 05.07.2018 அன்று ஐந்தாம் அழைப்பாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

| வ. | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|

| எண். | | (`. லட்சத்தில்) | குறைவு | அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | `. 5.00 | 0.01 % | – |
| 2 | திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர்.கவுண்டம்பாளையம் | | – | 1.57 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/246/18)

**தீர்மானம் எண். 347**

அனுமதிக்கப்பட்டது

(6) சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2017–18–இல் இந்நகராட்சிக்குட்பட்ட பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அங்கன்வாடி கட்டடம் `. 6.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 05.07.2018 அன்று ஐந்தாம் அழைப்பாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு **:**

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு (`. லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | `. 6.00 | 0.01 % | – |
| 2 | திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர்.கவுண்டம்பாளையம் | | – | 1.34 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/246/18)

**தீர்மானம் எண். 348**

அனுமதிக்கப்பட்டது

(7) சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2017–18–இல் இந்நகராட்சிக்குட்பட்ட போலீஸ் லைன் தெருவில் அங்கன்வாடி கட்டடம் `. 6.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 05.07.2018 அன்று ஐந்தாம் அழைப்பாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு (`. லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | `. 6.00 | 0.01 % | – |
| 2 | திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர்.கவுண்டம்பாளையம் | | – | 0.33 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/246/18)

**தீர்மானம் எண். 349**

அனுமதிக்கப்பட்டது

(8) சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2017–18–இல் இந்நகராட்சிக்குட்பட்ட செம்மலைத் தெரு நகராட்சி துவக்கப்பள்ளியில் அங்கன்வாடி கட்டடம் `. 6.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 05.07.2018 அன்று ஐந்தாம் அழைப்பாக பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் | மதிப்பீடு (`. லட்சத்தில்) | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | `. 6.00 | 0.01 % | – |
| 2 | திரு ஜே. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர்.கவுண்டம்பாளையம் | | – | 1.34 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு ஆர். மாணிக்கம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/246/18)

**தீர்மானம் எண். 350**

அனுமதிக்கப்பட்டது

(9) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் வீட்டு கழிவு நீரினை பாதாள சாக்கடையில் இணைக்க வீட்டின் உட்புறத்திலிருந்து கழிவுநீர் ஏற்படுத்தும் பணிகளுக்கு ஆங்கில நாளேடு மற்றும் தமிழ் நாளேட்டில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, தி இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் மக்கள் குரல் நாளேடுகளில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான தொகை `. 277673/—ஐ ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** விளம்பரக் கட்டணம் `. 277673/—ஐ வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/804/18)

**தீர்மானம் எண். 351**

அனுமதிக்கப்பட்டது

( 10 ) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பின் TN 28 AT 8969 வாகனத்தின் தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் நீக்கம் செய்ய வாகனம் பெறப்பட்ட அசோக் லைலண்ட், சேலம் என்ற நிறுவனத்திற்குச் சென்று தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இப்பணிக்காகும் உத்தேச செலவினம் `. 100000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் `. 100000/—ஐ வருவாய் நிதியில் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1417/18)

**தீர்மானம் எண். 352**

அனுமதிக்கப்பட்டது

( 11 ) சேலம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி, இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் ஒரு நாளைக்கு எத்தனை மெ.டன் உரக்கிடங்கில் கொட்டப்படுகிறது என்பதனை அறிந்து கொள்ள கடந்த 20.4.18, 21.4.18, 24.4.18 மற்றும் 25.4.18 ஆகிய 4 நாட்கள் இராசிபுரம் ஸ்ரீ வேல் வே பிரிட்ஜ் என்ற எடை மேடையில் நகராட்சி டிப்பர் லாரிகள் மற்றும் டம்பர் பின் லாரிகள் குப்பைகளோடு எடை போடப்பட்டது. அதற்கான கட்டணத் தொகை `. 2470/—ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி கட்டணத் தொகை `. 2470/—ஐ இந்நகராட்சி துப்புறவு ஆய்வாளர் திரு ர. பாஸ்கரன் அவர்களால் தொகை செலுத்தப்பட்டது. எனவே, மேற்படித் தொகை `. 2470/—ஐ துப்புறவு ஆய்வாளர் திரு ர. பாஸ்கரன் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/882/18)

**தீர்மானம் எண். 353**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கும், அனைத்து பள்ளி மாணவ, மாணவியருக்கும் டெங்கு, சிக்குன்குனியா போன்ற காய்ச்சல் வராமல் தடுக்க நிலவேம்பு கசாயம் தர வேண்டியிருப்பதால், நிலவேம்பு பவுடர்–200 கிலோ Tampcol Chevaai என்ற அரசு நிறுவனத்தில் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் `. 63400/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1418/18)

**தீர்மானம் எண். 354**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு லாரி ஓட்டுநர் தற்காலிகப் பணியிடம் ஒன்றினை 01.10.2010 முதல் 30.09.2011 வரை ஓராண்டிற்கு நீடித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் ஆணை மூ.மு.எண். 8269/2010/ஜே3 நாள் 22.11.2010–இல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சிக்கு ஓட்டுநர் பணியிடம் தேவையாக உள்ளது. மேற்படி ஓட்டுநர் பணியிடத்தை 01.10.2011 முதல் 30.09.2012 வரை பின்னேற்பும், மேலும் ஓராண்டிற்கு 1.10.2018 முதல் 30.09.2019 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரியும், தொடர்ந்து நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி 01.10.2011 முதல் லாரி ஓட்டுநர் பணியிடத்தை 30.09.2018 வரை பின்னேற்பும், 1.10.2018 முதல் 30.09.2019 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், ஓட்டுநர் பணியிடத்தை நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/3577/12)

**தீர்மானம் எண். 355**

அனுமதிக்கப்பட்டது

( 14 ) இராசிபுரம் நகராட்சி பொதுப்பிரிவில் இளநிலை உதவியாளர் பணியிடம் – 1, தட்டச்சர் – 1, வருவாய் உதவியாளர் – 1 மற்றும் தங்கும் விடுதி காவலர் – 1 ஆகிய பணியிடங்களை 01.10.2010 முதல் 30.09.2011 வரை தற்காலிகமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறைகள் ஆணை மூ.மு.எண். 49748/2010/எச்1 நாள் 04.11.2010–இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடங்கள் இந்நகராட்சிக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 01.10.2011 முதல் 30.09.2012 வரை மற்றும் 01.10.2012 முதல் 30.09.2018 வரை பின்னேற்பும் மேலும் ஓராண்டிற்கு 1.10.2018 முதல் 30.09.2019 வரை பணி நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், மேற்படி பணியிடங்கள் நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்காணும் தற்காலிகப் பணியிடங்கள் இந்நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால், 01.10.2011 முதல் 30.09.2018 வரை பின்னேற்பும் மேலும் ஓராண்டிற்கு 1.10.2018 முதல் 30.09.2019 வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரியும் மேற்படி பணியிடங்கள் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஒப்புதல் பெற பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/3575/12)

**தீர்மானம் எண். 356**

அனுமதிக்கப்பட்டது

(15) இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவிலுள்ள பொருத்துநர் நிலை–II இரண்டு பணியிடங்கள், மீட்டர் ரீடர் – ஒரு பணியிடம் ஆகிய தற்காலிகப் பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது செயல்முறை ந.க.எண். 6568/09/எப்3 நாள் 27.08.2014–இல் 1.10.2014 முதல் 30.9.15 வரை பணி நீடிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்கு மேற்படி பணியிடங்கள் அவசியம் தேவைப்படுவதால் மேற்படி தற்காலிகப் பணியிடங்கள் 1.10.2015 முதல் 30.09.2018 வரை பின்னேற்பும், 1.10.2018 முதல் 30.09.2019 வரை ஓராண்டிற்கு பணி நீடிப்பு அனுமதியும் மேற்படி பணியிடம் நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இந்நகராட்சி குடிநீர் பணிகளுக்கு அவசியம் தேவைப்படும் பொருத்துநர் நிலை–II இரண்டு பணியிடங்கள், மீட்டர் ரீடர் – ஒன்று ஆகிய தற்காலிகப் பணியிடங்களை 1.10.2015 முதல் 30.09.2018 வரை பின்னேற்பும், 1.10.2018 முதல் 30.09.2019 வரை மேலும் ஓராண்டிற்கு நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/3177/15)

**தீர்மானம் எண். 357**

அனுமதிக்கப்பட்டது

(16) நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அறிவுரைப்படி, இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்கவும், டெங்கு நோய் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளவும், 35 DBC பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்கள் தெரிவித்துள்ள தினக்கூலி `. 160/–அடிப்படையில் சுய உதவிக் குழுக்கள் மூலமாக நியமித்துக் கொள்ளவும், இந்நகராட்சி தூய்மை பாரத திட்டத்தின்கீழ் பணிபுரியும் 7 பரப்புரையாளர்கள் மற்றும் 1 மேற்பார்வையாளரை டெங்கு தடுப்புப் பணிகளை

மேற்பார்வையிடவும், நகரிலுள்ள NGO–க்களை இப்பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும் இதற்காகும் உத்தேச செலவினம் `. 9/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) நகராட்சி பொது வருவாய் நிதியிலிருந்து மேற்படிப் பணிகளை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1550/18)

**தீர்மானம் எண். 358**

அனுமதிக்கப்பட்டது

(17) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளில் எத்தனை சதவீதம் மக்கும் குப்பை, பிளாஸ்டிக் பேப்பர், ரப்பர் கிளாஸ், சில்ட், மெட்டல், துணி, பாலிதீன் ஆகியவற்றை கண்டறிந்து அளவீடு செய்யவும், நகராட்சிப் பகுதிகளில் குடியிருப்பு பகுதிகள், வணிகப் பகுதிகள் மற்றும் உரக்கிடங்கு பகுதிகளில் 3 sample எடுத்துச் சென்று ஆய்வகத்தில் ஆய்வு செய்து ஆய்வறிக்கை பெறவும், 'Green link Analytical and Research Laboratory (India) Pvt. Ltd., Coimbatore' என்ற நிறுவனத்தின் மூலம் மேற்படி பணிகளை மேற்க்கொள்ளவும், இதற்காகும் செலவினம் `. 15000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். வருவாய் நிதியிலிருந்து மேற்படிப் பணிகளை மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1580/18)

**தீர்மானம் எண். 359**

அனுமதிக்கப்பட்டது

(18) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புறவு அலுவலர் அவர்களுக்கு E. Tender-இல் கலந்து கொள்ள Signature card (E. Token) தேவைப்படுவதாலும், அதனை Digital identity, Trichy என்ற நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளவும், இதற்காகும் செலவினம் `. 2600/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1581/18)

**தீர்மானம் எண். 360**

அனுமதிக்கப்பட்டது

(19) தேர்தல்–மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் நேரடி அறிவுரையில் BLO APP–இல் DATA Entry பணியை விரைந்து முடிக்க 5–ற்கும் மேற்பட்ட DATA Entry operator-களைக் கொண்டு விரைந்து முடிக்க தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி பதிவேற்றம் ஒன்றிற்கு `. 0.50 பைசா வீதம் 37000 x 0.50 = `. 18500/-ம் வழங்க உத்தேச செலவினம் `. 18500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(அ1/1549/15)

**தீர்மானம் எண். 361**

அனுமதிக்கப்பட்டது

(20) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயக்கப்படும் டிப்பர் ஆட்டோ வாகன எண். TN 28 AS 0111 என்ற வாகனத்திற்கு புதியதாக 5 டயர்கள் மற்றும் 5 டியூப்கள் வாங்க 5.7.2018 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | 5 டயர் மற்றும் 5 டியூப்கள் விலை |
|---|---|---|
| 1) | சசி டயர்ஸ், இராசிபுரம் | `. 13100/– |
| 2) | மைலி டயர்ஸ், நாமக்கல் | `. 13400/– |
| 3) | எம்.எஸ்.பி. டயர்ஸ், நாமக்கல் | `. 13700/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், சசி டயர்ஸ், இராசிபுரம் என்ற நிறுவனத்திற்கு 5 டயர்கள் 5 டியூப்கள் சப்ளை செய்ய பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/1597/18)

**தீர்மானம் எண். 362**

அனுமதிக்கப்பட்டது

(21) இந்நகராட்சியின் 2016–17–ஆம் ஆண்டுக்கான தணிக்கை உள்ளாட்சி நிதித் தணிக்கை, உதவி இயக்குநர் அவர்களால் மேற்க்கொள்ளப்பட்டது. பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் கடைகளில் டைப் செய்து நகல் எடுத்தல், ஜெராக்ஸ் மற்றும் புக் பையிண்டிங் செய்தமைக்கான செலவுத் தொகை `. 8805/–ஐ திரு அ. நிலவழகன் பதிவறை எழுத்தரால் செலவு செய்யப்பட்டது. எனவே, மேற்படித் தொகை `. 8805/–ஐ வருவாய் நிதியிலிருந்து அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(டி3/1549/18)

**தீர்மானம் எண். 363**

அனுமதிக்கப்பட்டது

( 22 )   இராசிபுரம் நகராட்சி கோனேரிப்பட்டி எக்ஸ்டன்சன் நெ.2 பகுதியில் பழுதடைந்துள்ள சிறு பாலத்திற்கு பதிலாக புதிய சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் `. 100000/– மதிப்பீட்டுப் பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**   மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/479/18)

**தீர்மானம் எண். 364**

அனுமதிக்கப்பட்டது

( 23 )   இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி TN 28 AS 104–இன் தகுதிச்சான்று மற்றும் பழுதுகள் நீக்கம் செய்து பணி மேற்கொள்ள வாகனம் பெறப்பட்ட சுவராஜ் மஸ்தா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற டீலர் கிறிஸ்டல் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், கந்தம்பட்டி பைபாஸ், சேலம் என்ற நிறுவனத்திற்குச் சென்று பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் `. 77000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**   1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(எச்1/1416/18)

**தீர்மானம் எண். 365**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– ப. கிருஷ்ணமூர்த்தி,
தனி அலுவலர்

.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.